# 2
# சமணமும் சைவமும்

## காட்சி-1

*[பெண்களின் அழுகுரல் கேட்கிறது. அங்கொரு மரத்தடியில் ஆறுமுகன் உட்கார்ந்து ஓடு திருப்புகிறான். ஆனைமுத்து வருகிறான்.]*

ஆனைமுத்து: ஐயா என்ன அழுகுரல்? வீதி உற்சவத்தில் வேதபாராயணமா?

ஆறுமுகன்: கொலைக்களத்திலே! கோதையரின் நீலாம்புரி ராகம்!

ஆனை: யாரோ இறந்து விட்டார்கள் போலிருக்கிறது.

ஆறு: பூ! சைவக் கழுமரத்திலே சமணப் பழங்களின் சதையைத் தின்னப் பருந்தும் தெரிந்து வட்டமிடுகின்றன— ஊர் நரிகளும் தெரிந்து ஊளையிடுகின்றன. நீர் மதுரை ஆசாமியாயிருந்தும் வர்த்தமானந் தெரியவில்லை.

ஆனை: நான் மதுரையல்ல. தொண்டை நாடு. மிளகு முதலிய பண்டம் வாங்கச் சேரநாடு செல்லுகிறேன்.

ஐயா, கழுமரத்தில் சமணரா? ஏன் ஐயா; மதிக்கத்தக்க மதுரையில் சதிக்கும் இடமா? மதுரை மன்னன் ஆட்சியில் மதவாதிகளின் சூழ்ச்சியா? என்ன நடந்தது ஐயா?

ஆறு: நீர் பலநாடும் சுற்றுபவர்; உள்ளதை உம்மிடம் சொல்லத்தான் வேண்டும்.

இந்தப் பாண்டிய நாட்டு மன்னர் இருக்கிறாரே, அவர் சமணப் படுகுழியில் வீழ்ந்து கிடந்தார்....சரியா அது?

ஆனை: அது மடமை. நடுவு நிலைமை அல்லவா அரசனுக்கு உடைமை! எந்த மதத்திலும் சேராதிருப்பதே மன்னன் கடமை!

ஆறு: அரசர் சமணர்! தீர்ந்ததா? ஆதிக்கம் சமணர்களுக்கே, தீர்ந்தது! அதனால் இந்த நாட்டில் பெரும்பான்மை ஜனங்கள் சமணர்களானார்கள்! ஆனால் நல்ல வேளையாக அரசர் மனைவி மங்கையர்க்கரசி, மந்திரி குலச்சிறை இருவரும் ஒன்று, சைவ மதத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆனை: தீர்ந்தது! தீர்ந்தது தமிழரின் செம்மை நெறி! கூன்பாண்டியன் கொள்கை வேறு; மங்கையர்க்கரசியார் மதம் வேறு. கற்பின் இலக்கணத்தைக் கடலுலகுக்குக் காட்டிய மதுரை அரசியல் மஞ்சத்தில், எதிர்ப்பான இரண்டு உள்ளங்கள்! பிறகு?

ஆறு: சமணரைத் தொலைக்க வேண்டும். சர்க்காரைச் சரிக்கட்ட வேண்டும்! இது அமைச்சர், அம்மையார் இருவரின் அந்தரங்கம்.

ஆனை: பெரிய இடத்தில் களங்கம்!

ஆறு: அப்படி இருக்கையில் சம்பந்தர் தம் கூட்டத்தோடு மதுரைக்கு எழுந்தருளினார். மந்திரியும் மங்கையர்க்கரசியாரும் மகிழ்ந்தருளினார்கள்.

ஆனை: இருக்காதா! கழுத்தரியும் சிறுத்தொண்டர்களுக்குக் கத்தி ஒன்று கிடைத்தால் மகிழாமலா இருப்பார்கள்!

ஆறு: அரசியும், அமைச்சரும் வந்த சம்பந்தரை தனியாக ஓர் மடத்தில் குடியேற்றினார்கள்.

ஆனை: ஆம்! கோள்மூட்டும் விழாவுக்குக் கொடியேற்றினார்கள்.

ஆறு: சம்பந்தரின் மதுரை விஜயம் கண்ட சமணர்களுக்கு ஒரே பயம்.....

ஆனை: படுக்கை அறையில் மூட்டைப் பூச்சி கண்டமாதிரி.

ஆறு: ஏன் பயம் என்று கேளும்.

ஆனை: கேட்பானேன்? அஞ்சாத வஞ்சப் பிறவியல்லவா மூட்டைப்பூச்சி.

ஆறு: 'வந்துவிட்டானே சம்பந்தன். எங்களை வஞ்சித்துக் கெடுத்து விடுவானே'—என்று கூக்குரல் இட்டார்கள் சமணர், கூன்பாண்டியனிடம். அதற்கு அந்த ஒரு ஞானமுமில்லாத கூன்பாண்டியன் திருஞானசம்பந்தர் மடத்தில் தீ வைக்கும்படி சொன்னான்.

ஆனை: சொன்னால்?

ஆறு: தீ வைத்தார்கள்.

ஆனை: வைத்தவர்கள்?

ஆறு: சமணர்.

ஆனை: நம்புகிறீரா? ''கொல்லா'' விரதம் குவலயமெல்லாம் ஓங்க எல்லார்க்கும் சொல்லுவது என் இச்சை பராபரமே' என்ற கொள்கையுடைய சமணர் இப்படிச் செய்திருப்பார்களா?

ஆறு: கொல்லா விரதமட்டுமல்ல; எல்லா விரதமும் சமணருக்கு ஏட்டளவில்தான்.

ஆனை: தீ இட்டதால் செத்தவர்கள் எத்தனை பேர்?

ஆறு: யாரும் சாகவில்லை!

ஆனை: மடத்துக்கு?

ஆறு: அழிவு ஒன்றும் இல்லை. ஏனென்றால் அரசனால் இடப்பட்ட தீ, அரசனிடமே திரும்பிச் சென்று அவன் அடிவயிற்றில் கொடிய வெப்பு நோயாக ஆகிவிட்டது.

ஆனை: அரசர் பிழைத்தாரா?

ஆறு: சாகவில்லை. சமணரை அழைத்தார். தாங்காத நோயைத் தணிக்கச் சொன்னார். அவர்களால் முடியவில்லை. இதுதான் சமயம் என்று மந்திரியும் மங்கையர்கரசியும் சம்பந்தரிடம் ஓடி, இந்த நோய் தீர்க்கும் போட்டிப் பந்தயத்தில் கலந்து கொள்ள அழைத்தார்கள்.

ஆனை: இதுதான் சமயம் என்று அவர் ஒத்துக் கொண்டிருப்பார்.

ஆறு: அதுதான் இல்லை. சம்பந்தர் நேரே கோவிலுக்கு ஓடினார்; பதிகம் பாடினார்.

> வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
> ஆதம் இல்லி அமணரோடு தேரரை
> வாதில் வென்று அழிக்கத் திருவுள்ளமே!

சமணரை அழிக்க உத்தரவு கொடுக்கிறீரா, கோவிற் கடவுளே என்று கேட்டார்.

ஆனை: உத்தரவு கிடைத்ததா?

ஆறு: ஓ! உள்ளத்தில் புகுந்து உத்தரவு கொடுத்திருப்பார்.

ஆனை: அன்பர் கேட்கிறார். 'சமணரை அழிக்கவா' என்று. அன்பு கொடுத்ததாம், உத்தரவு; அழி அழி' என்று. நற்றமிழ் நாடு நாணியிருக்குமே! முத்தமிழ் சான்றோர் வெட்கித் தலை குனிந்திருப்பார்களே ஐயா—பிறகு?

ஆறு: சமணரால் தீர்க்க முடியாத அரசர் நோயை சம்பந்தர் தீர்த்தார். இது மட்டுமல்ல; ஏடெழுதி தீயில் இடு

வது; ஏடெழுதி ஆற்றில் இட்டு எதிரேறச் செய்வது ஆகிய பந்தயங்களிலும் சம்பந்தர்க்குச் சரியான வெற்றி. சமணர்களுக்கோ சகிக்க முடியாத தண்டனை.

ஆனை: விவரம்?

ஆறு: எண்ணாயிரம் சமணர் கழுவேற்றப்பட வேண்டும்.

ஆனை: ஆ!

ஆறு: அவர்களின் ஏந்திழைமார் கூந்தல் விரித்துக் கோவென்று அழுவதுதான்! அதோ அந்தச் சுருதி கூட்டாத வேத பாராயணக் குரல்கள்!

ஆனை: இந்தப் படுகொலைக்குச் சம்பந்தர் ஒப்பினார் அல்லவா?

ஆறு: அந்தச் சுவருக்கு அப்பால் எண்ணாயிரம் கழுமரத்தின் கொழுமுனை கிழித்த சமணர் உடம்பின் குருதி வெள்ளம் சம்பந்தர் திருவுள்ளம்! இம்மதம் அவர் சம்மதந் தானே!

ஆனை: கோவில்—அரசன்—மதம்! இந்த முத்தலைச் சூலம் இழைத்த பச்சைப் படுகொலை பழந்தமிழ் இலக்கியத்தில் ஓர் நச்சுப் பொய்கையைச் சேர்த்துவிட்டது. இந்த நிலையை விட்டு வைக்கும் நாள் ஒவ்வொன்றும் தமிழ் நாடு கெட்டுப் போகும் நாள் என்று தமிழர் உணரும் நாள் எந்நாளோ? சமணத் துறவியின்மேல் இந்தச் சாதாரணங்கள் சாற்றும் குற்றம் சைவ மடத்தில் தீ வைத்தார் என்பது. இது உண்மையானால் மாண்டவர் எத்தனை பேர்? ஒருவரும் இல்லையே!

சமணரின் நோக்கம் சரி! இல்லையென்றால் அது பொறுத்துக் கொள்ள முடியாததா?

''ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்கு
பொன்றும் துணையும் புகழ்.''

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

வள்ளுவர் காட்டிய இப்பாதை மண்மூடிப் போனதா? இல்லை; மத நெறியரின் கண்மூடிப் போனதா? ஆளவந்தாரை வசப்படுத்துவது; தம் அநியாய மதத்தை நிசப்படுத்துவது; அதன் பின் ஏழைகளுக்குக் கெடுதலை—ஏமாந்தால் படுகொலை அந்த எத்தர்களுக்குப் பக்தர்—ஜீவன்முக்தர்—உலகப் பிரசித்தர் என்று பெயர்! ஐயா, காவலர், சமணர் எவர்க்கும் கருணை காட்டவில்லையா?

ஆறு: கருணை காட்டினார்! சமணர்க்கு அல்ல; சமணர் இரத்தத்துக்கு அலையும் பருந்துக்கும்—நாய்க்கும்—நரிக்கும்!

ஆனை: தண்டனை நிறைவேற்றப்பட்டுவிட்டதா?

ஆறு: சிரிப்பு வருகிறது; இன்னும் நிறைவேற்றப் படவில்லை என்றால் நிறுத்தி விடுவீரோ?

ஆனை: உள்ளத்தைக் கிளறும் கேள்வி! உலகின் ஒரு மூலையில் ஓர் தமிழனின் ஒரு துளி ரத்தம் சிந்தினான் என்றால், உறையில் உருவித் தூக்கிய உலகத் தமிழரின் வாள் ஒடிந்து போகவில்லை. ஆனால் மதமயக்கத்தால் அவை ஓய்ந்து கிடப்பது உண்மைதானய்யா. மெய்யாய்ச் சொல்லுவேன் வீரத்தமிழர் வீறுகொண்டு கிளம்பும் நாள் தூரத்தில் இல்லை.

ஐயா! மதம்—மக்களை அதம் செய்யும் மதம், இதம் செய்கின்றதாமே!

சைவச் சர்க்கார் சாய்த்த சமணர் தலை இதோ எண்ணாயிரம்!

வைணவம் உடைத்த மண்டைகள் எண்ணற்ற ஆயிரம்.

...தன் உயராய்வ ... UNIVERS

சங்கரர் சர்க்கார் புத்தருக் கிழைத்ததைப் புகலவும் வாய் நடுங்கும்! புத்த மதத்தாரை கண்ட இடத்தில் வெட்ட வேண்டும். பார்த்தும் வெட்டாமல் விட்டுப் போவாரை வெட்டிப் புதைக்க வேண்டும். சங்கர சாக்காரின் சட்டம் இது. உருண்ட தலை ஒன்றல்ல; ஒருகோடி.

இதோ, இந்து மதம், முஸ்லீம் மதம்—இவைகளுக்குப் பரிந்து பாடுபடும் அறிஞர்களோ பலப் பலர்! அவர்கள் பெருக்கிய போரினால் தெருவில் ஓடிய ரத்த வெள்ளம் ஏரி அல்ல; இந்து மகா சமுத்திரம்!

'மதத்தின் பேரால் நாட்டைக் கொலைக் களமாக்கி விட்டார்கள்!' என்றார் ஓர் அறிஞர்! 'மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்' என்றார் மற்றொரு பேரறிஞர்.

அண்ணல் காந்தியால் யாருக்குத் தீமை? அகிலத்தின் தந்தையை விட்டதா கோட்சே மதம்!

படுகொலை! மதப் படுகொலை! சாகின்றார் எண்ணாயிரம் தமிழர்கள்!

ஆறு: இல்லை! செத்துவிட்டார்கள். போய்ப் பாரும்.

[ஆனைமுத்து ஓடுகிறான்.]

## காட்சி-2

[எண்ணாயிரம் சமணர்கள் கழுவேற்றப்பட்டு இருக்கிறார்கள். எதிரில் ஏந்திழைமார் குப்புற விழுந்து கிடக்கிறார்கள்.]

ஆனை: ஆ!

[ஆனைமுத்து முகத்தில் கைபொத்திக் கொண்டு மல்லாந்து விழுகிறான்.]

சங்கரர் சர்க்கார் புத்தருக் கிழைத்ததைப் புகலவும் வாய் நடுங்கும்! புத்த மதத்தாரை கண்ட இடத்தில் வெட்ட வேண்டும். பார்த்தும் வெட்டாமல் விட்டுப் போவாரை வெட்டிப் புதைக்க வேண்டும். சங்கர சாக்காரின் சட்டம் இது. உருண்ட தலை ஒன்றல்ல; ஒருகோடி.

இதோ, இந்து மதம், முஸ்லீம் மதம்—இவைகளுக்குப் பரிந்து பாடுபடும் அறிஞர்களோ பலப் பலர்! அவர்கள் பெருக்கிய போரினால் தெருவில் ஓடிய ரத்த வெள்ளம் ஏரி அல்ல; இந்து மகா சமுத்திரம்!

'மதத்தின் பேரால் நாட்டைக் கொலைக் களமாக்கி விட்டார்கள்!' என்றார் ஓர் அறிஞர்! 'மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்' என்றார் மற்றொரு பேரறிஞர்.

அண்ணல் காந்தியால் யாருக்குத் தீமை? அகிலத்தின் தந்தையை விட்டதா கோட்சே மதம்!

படுகொலை! மதப் படுகொலை! சாகின்றார் எண்ணாயிரம் தமிழர்கள்!

ஆறு: இல்லை! செத்துவிட்டார்கள். போய்ப் பாரும்.

[ஆனைமுத்து ஓடுகிறான்.]

## காட்சி-2

[எண்ணாயிரம் சமணர்கள் கழுவேற்றப்பட்டு இருக்கிறார்கள். எதிரில் ஏந்திழைமார் குப்புற விழுந்து கிடக்கிறார்கள்.]

ஆனை: ஆ!

[ஆனைமுத்து முகத்தில் கைபொத்திக் கொண்டு மல்லாந்து விழுகிறான்.]